## DEPOSITION OF WITNESS

**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.248/2025**
**Sessions :**
**Deposition of Witness for :PW2, LW7**

| | |
|---|---|
| Name | திரு.தேவன் |
| Father's/Husband Name | திரு.அண்ணாமலை |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 02nd day of July, 2026**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்

முதல் விசாரணை:-

1. நான் தற்போது செய்யூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.பரசுராமன் என்பவரின் கையெழுத்தும் விசாரணை நடைமுறையும் நன்றாக தெரியும் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 01.01.2023 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திரு.பரசுராமன் நிலைய பொறுப்பில் இருந்தபோது சிவா, த/பெ.காத்தவராயன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.1/2023 ல் இ.த.ச பிரிவுகள் 294(பி), 324, 506(1) கீழ் வழக்குபதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். (**அந்த புகார் மனு அ.சா.ஆ 2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது. (அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிவா மற்றும் ராஜசேகர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **(அந்த பார்வை மகசர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையான மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான சிவா மற்றும் ராஜசேகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் எதிரிகள் அனைவரும் 41ஏ கு.வி.மு.ச.பிரிவு கொடுக்கப்பட்டு பிணை முறை எழுதி வாங்கப்பட்டது. வழக்கு விசாரணையை முடித்து 01.03.2023 அன்று எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

4. நான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இல்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி தவறான புகாரை பெற்று சம்பவம் இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு  விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur